தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 07.11.2026

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி மற்றும் திறன் மேம்பாட்டில் மத்திய பட்டு வாரியம் – தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இணைந்து செயல்பட முடிவு

மத்திய பட்டு வாரியத்தின் (CSB) உறுப்பினர் செயலர் திரு. பி. சிவக்குமார், IFS, கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) மற்றும் மேட்டுப்பாளையம் வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை (FC&RI) பார்வையிட்டு, பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி, பயிற்சி, திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றம் தொடர்பான கூட்டு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார்.

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், மத்திய பட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது. இந்நிகழ்வில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பொறுப்பு துணைவேந்தர் முனைவர் மு. ரவீந்திரன், வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் அ. பாலசுப்பிரமணியன், பட்டு வளர்ப்புத் துறை பேராசிரியரும் தலைவருமான முனைவர் க. அ. முருகேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி, மல்பெரி மரபணு வளங்களின் மதிப்பீடு, தொழில்நுட்ப மேம்பாடு, திறன் வளர்ப்பு மற்றும் பயிற்சி சார்ந்த திட்டங்களில் இரு நிறுவனங்களும் இணைந்து செயல்பட உள்ளன.

தொடர்ந்து, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மல்பெரி தோட்டத்தில் பழம் தரும் சிறந்த மல்பெரி நாற்றுகளை நடவு செய்யும் நிகழ்வில் திரு. பி. சிவக்குமார்

பங்கேற்றார். மல்பெரி மரபியல் வளங்களைப் பாதுகாத்து மதிப்பீடு செய்து வரும் பல்கலைக்கழகத்தின் பணிகளை அவர் பாராட்டியதுடன், பட்டு வளர்ப்புத் துறையின் நிலையான வளர்ச்சிக்கு விவசாயிகளுக்குப் பயனளிக்கும் நடைமுறை சார்ந்த தொழில்நுட்பங்களை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

பின்னர், சிறுமுகை பட்டு நெசவுக் குழுமத்தில் (சாமரத்) (**SAMARTH**) திட்டத்தின் கீழ் நடைபெறும் பயிற்சி நடவடிக்கைகளை அவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பயனாளிகளுக்கான பயிற்சி வசதிகள் மற்றும் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளை ஆய்வு செய்து, நெசவாளர்களின் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்துவதற்கு செய்முறைப் பயிற்சி, தொழில்நுட்பத் திறன் வளர்ப்பு மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த திறன் மேம்பாடு அவசியம் எனக் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து, மேட்டுப்பாளையம் வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் (**FC&RI**) பேராசிரியர்கள் கலந்துரையாடினார். பட்டு வளர்ப்புக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளின் எதிர்கால வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடினார், தேவை சார்ந்த ஆராய்ச்சி, புதுமையான தொழில்நுட்பங்கள், தொழில்முனைவோர் திறன், திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்பப் பரவல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். இந்தப் நிகழ்ச்சியின் மூலம் ஆராய்ச்சி, கல்வி, திறன் மேம்பாடு மற்றும் களச் செயல்பாடுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு செய்து, பட்டு விவசாயிகள், மாணவர்கள், நெசவாளர்கள் மற்றும் பட்டு வளர்ப்புத் துறையுடன் தொடர்புடைய பல்வேறு தரப்பினரும் பயனடையும் வகையில் எதிர்காலத்தில் பல்வேறு கூட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

மக்கள் தொடர்பு அலுவலர்